www.tamilarangam.net

# தமிழ் மக்களே!

# உங்களுக்கு ஒரு தேர்தல் வேண்டுகோள்!

இன்னுமொரு தேர்தல் நெருங்குகிறது. யாரும் மேய்ப்பதற்கும் ஏய்ப்பதற்கும், தமிழ் மக்கள் மந்தைகளுமல்ல, மடையர்களுமல்ல. சொந்தப் புத்தியில் செயற்படுங்கள். உங்கள் பாழாய்ப்போன தலைவிதியை மாற்றக்கூடிய தேர்தல் இது. இந்தப் பொன்னான சந்தர்ப்பத்தை வீணாக்காதீர்கள்.

வாகனங்களில் ஏற்றி வாக்குச் சாவடிகளில் இறக்குபவர்கள், சாய்ப்பவர்கள் கையில் அகப்படாதீர்கள். உங்களுக்குத் தெரிந்த வழியில் சென்று உங்கள் வாக்கைப் போடுங்கள். சாவடிகளின் அயலில் கோஷ்டிகளாய் நின்று உங்களைக் கெஞ்சுவர், உபதேசிப்பர், வெருட்டுவர் - எதற்கும் எடுபடாதீர்கள். மிரளாது, பிடி கொடுக்காது, நிதானமாகவும் அசந்து போகாமலும் உங்கள் வாக்கைப் போடுங்கள்.

உங்களது வாக்காளர் அட்டை உங்களுக்குக் கிடைக்காமல் போவதற்கும் சந்தர்ப்பங்கள் உள்ளன. வாக்களிக்க வாக்காளர் அட்டை அவசியமில்லை. உங்களது வாக்குச் சாவடிக்குச் தாமதியாது காலையிலேயே சென்று வாக்கைப் போடுங்கள்.

**அர்த்தமில்லாத பயத்துக்கு ஆளாகாதீர்கள். வாக்களிக்குந் தறுவாயில் நீங்கள் தனிமையாகவே வாக்குச் சாவடிக்குள் நிற்பீர்கள். நீங்கள் யாருக்குப் புள்ளடி போடுகிறீர்கள் என்பதை யாரும் காணமுடியாது. துணிந்து வாக்களியுங்கள். தேர்தல் அடாவடித்தனத்துக்கு இடமளிக்காதிருக்கவே இரகசிய வாக்கெடுப்பு முறை உருவாக்கப்பட்டு உலகெங்கும் அமுல்படுத்தப்படுகிறது. அஞ்சாதீர்கள்.**

இறந்தவர்களின், இல்லாதவர்களின் வாக்காளர் அட்டைகளை சில்லறைக் காசுக்காகவோ, ஏனோ தானோ என்றோ எவர் கையிலும் கொடுக்காதீர்கள். கள்ள வாக்குப் போடவும், வாக்குப் பெட்டிகளை அடையவும் நீங்கள் காரணமாகாதீர்கள்.

இன்னார் தான் தேர்தலில் போட்டியிடலாம் என்பது ஜனநாயகமல்ல. நானாவிதமான அரசியல் கருத்துக்கள், மனிதர்கள் தேர்தல் களத்தில் மோத, தகுந்த கருத்தையும், தகுந்தவரையும் தேர்ந்தெடுப்பதே தேர்தல். இல்லையென்றால், ஏன் வாக்களிப்பு? இத்தனை செலவு? இத்தனை ஆரவாரம்? இத்தகைய மிரட்டல்களுக்கு முகம் கொடுத்து துணிந்து தேர்தலில் நிற்பவர்களையே ஆதரியுங்கள்.

**தமிழர்களின் தேவை இனியும் தாமதியாது நிரந்தர அரசியல் தீர்வைப் பெறுதலும் தமது பிரதேசங்களில் பூரணமான ஜனநாயகத்தை நிலைநாட்டுதலுமே ஆகும். எமது தேவை இடைக்கால நிர்வாகமல்ல. தமிழ் மக்களை யாரும் நிர்வகிக்கத் தேவையுமில்லை. அவர்கள் தம்மைத் தாமே நிர்வகிக்கக் கூடிய திறமைசாலிகள், பொது அறிவு மிக்கவர்கள், பண்பானவர்கள்.**

இன்னும் எத்தனை காலம் இப்படி அஞ்சி அஞ்சி வாழப் போகிறோம்? கள்ளங் கபடமற்ற சின்னஞ் சிறுவர்கள் போர்க்களத்தில் சாகடிக்கப்படுவது இன்னும் எத்தனை காலத்திற்கு? இவர்களின் பெற்றோர்கள் தற்கொலை செய்வதும், பைத்தியமாக அலைவதும் பிரமை பிடித்து வாளாவிருப்பதும் இன்னும் எத்தனை காலத்திற்கு? தமிழ் மக்களே! சிறிது யோசியுங்கள். யாரும் நாம் தப்பித்துக் கொண்டோமென எண்ணவேண்டாம். இந்த நாடகம் கட்டம் கட்டமாகத் தொடரும். கவனம்.

தமிழர்கள் எந்த இனத்திற்கும் இளைத்தவர்களும் அல்ல, கொம்பர்களும் அல்ல. எமது மண்ணில் எம்மோடு பிறந்த முஸ்லிம் மக்களை அரவணைப்பது எங்கள் தலையாய கடன்.

சிறுகச் சிறுக சேமித்த செல்வம் பகற்கொள்ளை போவது இன்னும் எத்தனை காலம்?

**இனிப் போரும் வேண்டாம். எவரும் சாகவும் வேண்டாம். மர்மச் சாவுகள் தொடரவும் வேண்டாம். தமிழ் மக்களே! நீங்களும் மற்ற மனிதர்களைப் போல சுதந்திரமாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ வேண்டாமா? நன்றாகச் சிந்தித்து வாக்களித்து உங்கள் உள்ளக்கிடக்கையை பரந்த உலகத்துக்கு எடுத்துரையுங்கள்.**

ஜனநாயக நீதிக்கான தமிழர்